# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண். 108/2019

வாதி தரப்பு 1 வது சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.அல்லிமுத்து, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

| | |
|---|---|
| பெயர் ராமமூர்த்தி வா.சா.-1 | சாதி |
| த/பெ. | மதம் |
| கிராமம் | தொழில் |
| தாலுகா | வயது |

---

முதல் விசாரணை 08-08-2024

நான் இந்த வழக்கின் வாதி. வாதி தரப்பு 1 வது சாட்சி. என் தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். எனக்கு எழுதப்படிக்கத் தெரியாது. கையொப்பம் மட்டும் போடுவேன். நிரூபண வாக்குமூல விவரங்களை படித்துக் காட்ட விவரங்களைத் தெரிந்து கொண்டுதான் கையொப்பம் செய்தேன்.

19-8-1929-ம் தேதியில் எனது தகப்பனார் கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தின் SRO நகல் **வா.சா.ஆ.–1** ஆகும். 05-07-2013 ம் தேதியில் பிரதிவாதி சுப்பாராஜ் அவரது வழக்கறிஞர் மூலம் எனக்கு அனுப்பிய அறிவிப்பின் சார்பு நகல் **வா.சா.ஆ.–2** ஆகும். நான் எனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதியின் வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ.–3** ஆகும். பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

1, 2 பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க கு.வி. ஒத்தி வைக்கப்படுகிறது.